# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,906—1970 මැයි 15 වැනි සිකුරාදා—1970.5.15

14,906 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு மே மாதம் 15 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்வதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விளக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | 303 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | 304 | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | 304 | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | 306 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 307 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாணுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 306 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 169

எண். டி. 251/ஆர்சசிரி/3

### இலங்கை அரச கடற்படை—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஏற்றம்

1968, யூன் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து இன்ஸ்றரக்ரர் லெவ்ரினன்ற் கொமாண்டர் ஆகக் கடவர் :

இன்ஸ்றரக்ரர்—லெவ்ரினன்ற் ரி. மகாதேவா, இலங். அ.க.

2. 1970.3.26 ஆம் திகதிய 14,899 ஆம் எண் கொண்ட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட 1970 ஆம் ஆண்டின் 105 ஆம் எண்கொண்ட அறிவித்தல் இத்தால் நீக்கப்படுகிறது.

அதி உத்தமஞரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, மே 2.

5–231

1970 இன் இல. 170

எண். டி/விஎவ்/2/எ (iii)

### தரைப்படை—சி.வி.எவ். —அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஏற்றங்கள்

1970 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் லெவ்ரினன்றுகளாகக் கடவர் :—

செகண்ட்—லெவ்ரினன்ற் ஆறச்சி பட்டபெந்திகே தயாசேன எதிரிசூரிய, சி.எல்.ஐ.
செகண்ட்—லெவ்ரினன்ற் லெனுர்ட் சமரசிறி முனசிங்க, சி.எல்.ஐ.
செகண்ட்—லெவ்ரினன்ற் சிரியான் விவேகானந்த வணிகசேகர, சி.எல்.ஐ.
செகண்ட்—லெவ்ரினன்ற் அன்ரன் சிறிகாந்தன் மதுரநாயகம், சி.எல்.ஐ.

அதி உத்தமஞரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, மே 4.

5–280.

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

1970 இன் இல. 171

எண் டி/விஎவ்/10/எ (II)

### தரைப்படை—சி. வி. எவ்.—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அரசாணை அமர்வுகளும் நியமனங்களும்

அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் கீழ்க்குறிப்பிடப்பெற்ற ஆணையினரைத் தரைப்படையின் தொண்டர் படையில் லெவ்ரினன்ற்ஸ் (குவாட்டர் மாஸ்ரேர்ஸ்) (தொழில்நுட்ப) ஆகப் பின்வரும் முதுமுறை ஒழுங்கின்படி 1970, மாச்சு மாதம் 1 ஆம் திகதியிலிருந்து அரசாணையமர்வு செய்தலையும் இலங்கைத் தரைப்படை மருத்துவச் சிறப்பணிக்கு (தொண்டர் படை) நியமித்தலையும் அங்கீகரித்தலில் களிப்படைந்துள்ளார்:

எண் 1312 ஸ்ராவ் சார்ஜென்ற் டொன் எதிரிசேன கொத்தலாவல
எண் 1397 சார்ஜென்ற் திரிமான்னஹெட்டிகே டொன் விலி திசாநாயக

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு.
1970 ஏப்பிரல் 29.

5–278

---

1970 இன் இல. 172

எண் டி/விஎவ்/38(III)

### தரைப்படை—சி. வி. எவ்.—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அரசாணை அமர்வும் சேவைக்கு நியமித்தலும்

அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் 1970 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் தரைப்படையின் தொர்ண்ட படையில் கீழ்க் குறிப்பிடப்பட்ட கனவானே செக்கன்ட்–லெவ்ரினன்ற் ஆக அரசாணை அமர்வு செய்தலையும், இலங்கைத் தரைப்படைச்சேவைச் சிறப்பணி (தொண்டர்) பிரிவில் அவரைச் சேவைக்கு நியமித்தலையும் அங்கீகரிப்பதிற் களிப்படைந்துள்ளார்.

திரு. ரஞ்ஜித் அதுலத்முதலி.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, மே மாதம் 4 ம் திகதி.

5–275

---

## அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 173

அரசாங்க சேவை ஆணைக்குழு பின்வரும் நியமனங்களைச் செய்யுமாறு கட்டளையிட்டுள்ளது :—

எ. 109/69

இலங்கை நிர்வாக சேவையில் உள்ள திரு. டபிள்யு. பத்மநாதன் அவர்கள் உள்ளூராட்சி அமைச்சின் அமைப்புத் திட்டப் பணிப்பாளர் பதவியில் 1970, பெப்ருவரி 22 ம் திகதி தொடக்கம் பதில் கடமை ஆற்றுவார்.

எ. 109/69

உள்ளூராட்சி அமைச்சின் அமைப்புத் திட்டப் பிரிவின் பதில் பணிப்பாளராகிய இலங்கை நிருவாகச் சேவையைச் சேர்ந்த திரு. டபிள்யு. பத்மநாதன் அவர்கள் தமது கடமைகளுடன் உள்ளூராட்சி அமைச்சின் நிதிதாபனப் பிரிவின் சிரேட்ட உதவிச் செயலாளர் பதவியிலும் 1970, பெப்ருவரி 22 ம் திகதியில் இருந்து பதில் கடமை ஆற்றுவார்.

டி. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
தபாற்பெட்டி இல. 500,
கொழும்பு–1,
6.5.1970.

5–245

---

## நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிரவும்

1970 இன் இல. 174

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செய்யப்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. ஈ. ஏ. விஜகுலசூரிய .. | குருணாகல், எண்ணின்மிக்க உத்தியோகத்தரும் மேலதிக நீதவானுகவும், குளியப்பிட்டிய முதலிய இடங்களில் | 1970 மே 1 லிருந்து .. | மறு அறிவித்தல் வரை |
| திரு. ஆர். டி. பி. ஜயசேகர .. | மேலதிக நீதவான் முதலியன, நீர்கொழும்பு | ஷ .. | ஷ |
| திரு. சி. எம். தர்மலிங்கம் .. | எண்ணின்மிக்க உத்தியோகத்தரும் மேலதிக நீதவான் முதலியனவாகவும், அவிசாவளை | 1970 மே 1 லிருந்து 31 வரை | அல்லது மறு அறிவித்தல்வரை |
| திரு. ஆர்.- நவரட்ணம் .. | மேலதிக நீதவான் முதலியன, கொழும்பு | 1970 மே 1 லிருந்து .. | மறு அறிவித்தல் வரை |
| திரு. ஏ. வைத்தியலிங்கம் .. | மாவட்ட நீதிபதி முதலியன, பருத்தித்துறை | ஷ .. | ஷ |
| திரு. ஐ. ஜி. என். டீ ஜே. செனிவிரட்ண | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, கொழும்பு | ஷ .. | ஷ |
| திரு. எஸ். ஜெகனுதன் .. | மேலதிக நீதவான் முதலியன, குருணுகல். அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1970 மே 4 லிருந்து .. | குருணுகல் நீதிமன்ற 62207, 59636 இலக்க வழக்குகளில் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. சி. எல். டீ சில்வா .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, பலப்பிட்டி | 1970 ஏப்ரல் 30 .. | திரு. எல். எச். டீ அல்விஸ் இல்லாத காலம் |
| திரு. எம். எம். விஜசூரிய .. | மேலதிக நீதவான் முதலியன, கொழும்பு | 1970 மே 2 .. | கொழும்புத் தெற்கு நீதிமன்ற 12754/ஏ இலக்க வழக்கில் தண்டனை விதிப்பதற்கு |
| திரு. எஸ். எம். எம். முஸ்தாப | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, கண்டி | 1970 மே 7 .. | திரு. எஸ். டி. ஜயசுந்தர இல்லாத காலம் |
| திரு. எச். எஸ். ஏ. பெரேரா .. | குருநாகல் மேலதிக நீதவான், குளியப்பிட்டி முதலிய இடங்களில் | 1970 ஏப்ரல் 30 லிருந்து மே 2 வரை | திரு. டி. எஸ். டி. பி. ஆர். சேனுயக்க இல்லாத காலங்கள் |

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. எ. சீமாம்பிள்ளை .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, மன்னார்—வவுனியா | 1970 மே 15 லிருந்து 20 வரை | திரு. எம். பி. ஜி. திசனாயக்க இல்லாத காலங்கள் |
| திரு. எச். பி. பெரெரா .. | மேலதிக நீதவான் முதலியன, குருணாகல் | 1970 மே 2 .. | திரு. கே. வி. சுவர்ணதிபதி இல்லாத காலம் |
| திரு. கே. நவரட்ணராஜா .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன், மட்டக்களப்பு | 1970 மே 6 லிருந்து 10 வரை | திரு. டி. எஸ். நெத்சிங்க இல்லாத காலங்கள் |
| திரு. கே. ஈ. கதிர்காமலிங்கம் | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, யாழ்ப்பாணம் | 1970 மே 6 லிருந்து 9 வரை .. | திரு. ஆர். பரமகுரு இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். கனகரட்ணம் .. | ஷை ஷை .. | 1970 மே 10 லிருந்து 13 வரை | ஷை ஷை |
| திரு. எ. என். டீ சில்வா .. | மேலதிக நீதவான் முதலியன, பாணந்துறை | 1970 மே 8 .. | திரு. ஜி. ஜி. டி. டீ சில்வா இல்லாத காலம் |
| திரு. எம். எம். விஜயசூரிய .. | மேலதிக விண்ணப்ப நீதிமன்ற ஆணையாளர் முதலியன, கொழும்பு | 1970 எப்ரல் 27, 29, 30 .. | திரு. சி. ஈ. மென்டிஸ் இல்லாத காலங்கள் |
| திரு. பி. வி. பொட்டேஜு .. | ஷை ஷை .. | 1970 மே 2 லிருந்து 4 வரை .. | திரு. ஜி. எவ். எச். அதுருப்பான இல்லாத காலங்கள் |
| திரு. என். சின்னையா .. | மட்டக்களப்பு மேலதிக மாவட்ட நீதிபதி, கல்முனை முதலிய இடங்களில் | 1970 மே 15 லிருந்து 23 வரை | திரு. ரி. என். அபேவீர இல்லாத காலங்கள் |
| திரு. சி. தியாகராஜா .. | கண்டி மேலதிக மாவட்ட நீதிபதி, மாத்தளை முதலிய இடங்களில் | 1970 மே 3 லிருந்து 6 வரை .. | திரு. எஸ். செல்லையா இல்லாத காலங்கள் |
| திரு. எல். டபிள்யூ. பெர்ணண்டோ | கண்டி மேலதிக மாவட்ட நீதிபதி, கம்பளை முதலிய இடங்களில் | 1970 எப்ரல் 24 லிருந்து 26 வரை | திரு. எல். எ. குணவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. ஆர். விக்ரமசிங்க .. | மேலதிக நீதவான் முதலியன, காலி .. | 1970 எப்ரல் 16, 17 .. | திரு. ஜே. சேனாதிராஜா இல்லாத காலங்கள் |
| திரு. எம். ஜே. பீரிஸ் .. | மேலதிக நீதவான் முதலியன, பதுளை .. | 1970 மே 1 .. | திரு. எஸ். ஜே. டி. டீ எஸ்.விஜயரட்ண இல்லாத காலம் |
| திரு. கே. ரட்ணசிங்கம் .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, பருத்தித்துறை | 1970 எப்ரல் 30 .. | திரு. சி. எம். தர்மலிங்கம், இல்லாத காலம் |
| திரு. எ. எல். எம். பெர்ணண்டோ | குருவித்திக் கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றத் தலைவர் | 1970 மே 1 லிருந்து .. | மறு அறிவித்தல் வரை |
| திரு. பி. எம். பற்ரபற்தி .. | மாகம்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 எப்பிரல் 16 லிருந்து .. 18 வரை | திரு. எச். எம். எஸ். பி. மாதவல இல்லாத காலங்கள் |
| திரு. டபிள்யூ. ஜே. எ. விமல .. தர்மா | தெகிகம்பல் கோறளை முதலியவற்றின் ஊர் நீதி மன்றப் பதில் தலைவர் | 1970 எப்பிரல் 18 .. | திரு. எஸ். தர்மதாச இல்லாத காலம் |
| திரு. ஐ. பெர்ணண்டோ .. | பிற்றிகல் கோறளை வடக்கு முதலியவற்றின் ஊர் நீதிமன்றப்பதில் தலைவர் | 1970 எப்பிரல் 30 .. | திரு. யி. ஜே. எஸ். எ. பெரேரா இல்லாத காலம் |
| திரு. ஜி. சூரியஆராச்சி .. | தேவமிதிஅற்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 எப்ரல் 29, 30 .. | திரு. சி. எ. எஸ். ஈ. கிறிஸ்பின் இல்லாத காலங்கள் |
| திருமதி எம். ஜி. திசநாயக்க .. | குருவித்திக் கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 மே 2 .. | திரு. எ. எல். எம். பெர்ணண்டோ இல்லாத காலம் |
| திரு. எஸ். எஸ். எம். தீரரட்ண | மொறவக்கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்ற மேலதிகத் தலைவர் | 1970 எப்ரல் 24 லிருந்து .. | தம்பல்ல ஊர்நீதிமன்ற 2399, 2342, 5525 இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஐ. பெர்ணண்டோ .. | பிற்றிகல்கோறளை வடக்கு முதலியவற்றின் ஊர்நீதிமன்ற மேலதிகத் தலைவர் | 1970 மே 17 லிருந்து .. | மாதம்ப ஊர்நீதிமன்ற 9525 இலக்க குற்றவியல் வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ரி. யு. கரவிற்ற .. | வடக்கு உறுளுப்பலாத்த முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 எப்ரல் 26 .. | திரு. டபிள்யூ. எ. பி. ஓ. பெர்ணண்டோ இல்லாத காலம் |
| திரு. எம். புளங்குளம .. | ஷை ஷை .. | 1970 எப்ரல் 27 .. | ஷை ஷை |
| திரு. ரி. யு. கரவிற்ற .. | நுவரகம்பலாத்த முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 எப்ரல் 30 .. | திரு. பி. எஸ். விக்ரமசிங்க இல்லாத காலம் |
| திரு. என். பி. ராஜபக்ச .. | கல்கமுவ காரியாதிகாரிப்பிரிவு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 எப்ரல் 27 .. | திரு. எம். எம். பெரெரா இல்லாத காலம் |
| செல்வி ஐ. எம். எஸ் கொடகும்புர | அட்டகளன் கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 மே 8 .. | திரு. சி. பி. உனுகும்புர இல்லாத காலம் |
| திரு. ஈ. எஸ். ராஜபக்ச .. | கொட்மலே முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 மே 6 .. | திரு. சி. ஈ. எ. குணசேகர இல்லாத காலம் |
| திரு. எ. சி. ஜபார் .. | கரவக்குப்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 மார்ச் 21, 24, 25, 28 ம் எப்ரல் 29 ம் | திரு. கே. நாகலிங்கம் இல்லாத காலங்கள் |
| திரு. வை. கருணாயக்க .. | வெல்லாப்பொடப் பற்று முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 மே 2 லிருந்து 4, 12, 14 ம் | திரு. பி. ஆர். ஓ. விஜயதிலக்க இல்லாத காலங்கள் |
| திரு. கே. எ. அரசக்கோன் .. | ஏறுவில் பொறைதீவு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 எப்ரல் 24 லிருந்து 26 ம் 29, 30 ம், மே 2 லிருந்து 4 ம், 6 ம் | திரு. எ. எல். எம். பெர்ணண்டோ இல்லாத காலங்கள் |
| திரு. எச். டபிள்யு. டி. என். வெத்தசிங்க | குருவித்திக்கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 மே 3 .. | திரு. எ. எல். எம். பெர்ணண்டோ இல்லாத காலம் |

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த.பெ. 573, கொழும்பு 12
1970 ம் ஆண்டு மே மீ 7 ந் உ.
5–346/1

சிறிமேவன் அமெரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

---

1970 இன் இல. 175

## நீதிச்சேவை ஆணைக்குழுவினால் உறுதிப்படுத்தப்பட்டதும் நீக்கப்பட்டதுமான நியமனங்கள்

திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம், 1966 எப்ரல் 29 லிருந்து இலங்கை நீதிச்சேவையில் உத்தியோகத்தர் ஒருவராக உறுதிப்படுத்தப்பட்டுள்ளார்.

1970 மார்ச் 6, திரு. ஜி. நுகவெல இல்லாத காலத்திற்கு பாததும்பர ஊர்நீதிமன்றப் பதில் தலைவராக நியமிக்கப்பட்ட திரு. ஜே. ஈ. இலங்கன்திலக்கவின் நியமனம் நீக்கப்பட்டுள்ளது.

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த.பெ. 573, கொழும்பு 12
1970 ம் ஆண்டு மே மீ 7 ந் உ
5–346/2

சிறிமேவன் அமெரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

## மற்றைய நியமனங்களும் பிறவும்

1970 இன் இல.176

பி 4/எஸ்வி 4/39, பி 4/எஸ்வி 9/71, பி 4/எஸ்வி 9/104, பி 4/எஸ்வி 23/6, பி 4/எஸ்வி 9/182, பி 4/எஸ்வி 2/364, பி 4/எஸ்வி 1/28, பி 4/எஸ்வி 9/189, பி 4/எஸ்வி/நில/47, பி 4/எஸ்வி 2/78, பி 4/எஸ்வி 9/171, பி 4/எஸ்வி 3/137, பி 4/எஸ்வி 2/367, பி 4/எஸ்வி 5/17, பி 4/எஸ்வி 16/48, பி 4/எஸ்வி 3/151, பி 4/எஸ்வி 10/15, பி 4/எஸ்வி 3/153, பி 4/எஸ்வி 4/38, பி 4/எஸ்வி நில/2.

### நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டம்

**82 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

(6 ஆம் அத்தியாயமான) நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டத்தின் 82 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதி அமைச்சர் அலெக்சாந்தர் பெயர்லி விஜேமான்ன ஆகிய யான்—

1. வீரதந்திரிகே கெலிக்ஸ்ரஸ் டயஸ் அவர்களை நீர்கொழும்பு நீதி நிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
2. வழக்கறிஞர் ; எம். எ. எஸ். மரிக்கார் அவர்களைக் கண்டி நீதி நிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும் உத்தியோகத் தொடர்பற்ற நீதிவானுகவும் ;
3. கருப்பையா ஆறுமுகம் அவர்களைக் கண்டி நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும் ;
4. கந்தாதேகே புஞ்சி பண்டா அவர்களை வவுனியா நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும் ;
5. அடயப்பயலே கெதர அப்துல் காதர் ஹஜ்ஜியாரின் மகன் முகமது யூசுப் அவர்களைக் கண்டி நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும் ;
6. முகமது ஜாபீர் அப்துல் காதர் அவர்களைக் கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும் ;
7. முது சங்கரலிங்கம் செல்லசாமி அவர்களைத் தீவின் எல்லா நீதி நிருவாக மாவட்டங்களுக்குமான சமாதான நீதிவானொருவராகவும் ;
8. பகல ரப்பேகமுவே கெதர ஜயதிலக அவர்களைக் கண்டி நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும் ;
9. வழக்குரைஞர் பி. சி. த சில்வா அவர்களை, கடற்றொழிற்றிணைக்களத்தில் முகாமை அலுவலர் பதவியை அவர் வகிக்கையில், தீவின் எல்லா நீதிநிருவாக மாவட்டங்களுக்குமான பதவிவழி சமாதான நீதிவானொருவராகவும் ;
10. வெள்ளைச்சாமி சண்முகராசா அவர்களைக் கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும் ;
11. ராசவிவேக வெல்லால இடம்கெதர அமரதாச செனரத்ன அவர்களைக் கண்டி நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும் ;
12. பல்லியகுருலலாகே டொன் போல் அவர்களைக் கழுதிறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
13. அப்துல் ரகமான் முகமது இலியாஸ் அவர்களைக் கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும் ;
14. மந்திரி பெருமன் சுந்தரம் அவர்களை மேல் மாகாண நீதிநிருவாக மாவட்டங்களுக்கான சமாதான நீதிவானொருவராகவும் ;
15. முகமது இஸ்மெயில் மகல்லம் முகமது சாலி மகல்லம் அவர்களை மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும் ;
16. மத்தும பண்டாரகே டொன் சீமன் கருணரத்ன அவர்களைக் கழுத்துறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும் ;
17. வழக்கறிஞர் வேலாயுதம் விசயசுந்தரம் அவர்களை நுவரேலியா நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும் ;
18. காசி மரிக்கார் அப்துல் கபூர் ஹஜ்ஜியார் அவர்களைக் கழுத்துறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும் ;
19. விசயரத்தினம் ஜெயரத்தினம் அவர்களை நீர்கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும் ;
20. இ. டபிள்யு. ஜயவர்தன அவர்களை, கண்டி தேசிய வீடமைப்பு உதவியாணையாளர் பதவியை அவர் வகிக்கையில், கண்டி நீதி நிருவாக மாவட்டத்திற்கான பதவிவழி சமாதான நீதிவானொருவராகவும் இத்தால் நியமிக்கின்றேன்.

ஏ. எப். விஜேமான்ன,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 ம் ஆண்டு மே 8 ஆந் உ.

5—333/1

### திருத்தம்

இல. பி 4/எஸ்வி 14/76.

1970 ஆம் ஆண்டு எப்பிரல் 24 ஆந் தேதிய 14,903 ஆம் இலக்க அரசாங்கக் கசெற்றில் பகுதி I பிரிவு I இன் 267 ஆம் பக்கத்தில் வெளியான 1970 இன் 144 ஆம் இலக்க அறிவித்தல், " 3. மொரம்பிட்டிய கேவாகே கென்றி ஆரியரத்ன அவர்களைக் காலி நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "3. மொரபிட்டிய கேவா கென்றி ஆரியரத்ன அவர்களைக் காலி நீதி நிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்" என்னும் சொற்களை இடுதல் மூலம் இத்தாற்றிருத்தப்படுகிறது.

இல. பி 4/எஸ்வி 18/19.

1970 ஆம் ஆண்டு எப்பிரல் 24 ஆந் தேதிய 14,903 ஆம் இலக்க அரசாங்கக் கசெற்றில் பகுதி I பிரிவு I இன் 267 ஆம் பக்கத்தில் வெளியான 1970 இன் 144 ஆம் இலக்க அறிவித்தல், " 1. வனசிங்க முதியன்சேலாகே கல்யாணபால அபேகுணவர்தன அவர்களைத் தங்காலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "1. வனசிங்க முதியன்சேலாகே கல்யாணபால அபேகுணவர்தன வீரசிங்க அவர்களைத் தங்காலை நீதி நிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்" என்னும் சொற்களை இடுதல் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

இல. பி 4/எஸ்வி 26/6.

1970 ஆம் ஆண்டு எப்பிரல் 10 ஆந் தேதிய 14,901 ஆம் இலக்க அரசாங்கக் கசெற்றில் பகுதி I பிரிவு I இன் 239 ஆம் பக்கத்தில் வெளியான 1970 இன் 133 ஆம் இலக்க அறிவித்தல், "1. கதிரதம்பி சுப்பிரமணியம் சித்திரவேலு அவர்களைத் திருகோணமலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும் " என்னும் சொற்களுக்குப் பதிலாக "1. கதிரித்தம்பி சுப்பிரமணியம் சித்திரவேலு அவர்களைத் திருகோணமலை மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

ஏ. எவ். விஜேமான்ன,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 ஆம் ஆண்டு மே மீ 7 ஆந் உ

5—333/2

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளை

**61 ஆ பிரிவின் கீழான கட்டளை**

1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 61 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் இடப்பட்ட கட்டளை

டி. ஆர் எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மே மீ 2 ந உ

**196 ஆம் இலக்கக் கட்டளை**

1. இதிலுள்ள அட்டவணையின் முதலாம் நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆண்டொன்றுக்கு ரூபா 2,700 க்கு மேற்படாத உபகாரச் சம்பள வரும்படிகளை அல்லது ஆண்டொன்றுக்கு ரூபா 3,180 க்கு மேற்படாத உபகாரச் சம்பள மற்ற வரும்படிகளைப் பெறும் வர்த்தக கப்பற் சேவைத் திணைக்கள உத்தியோகத்தர் எவரையேனும் கண்டிப்பதற்கு அல்லது கடுமையாகக் கண்டிப்பதற்கு அல்லது ஒருவாரச் சம்பளத்திற்கு மேற்படாத குற்றப்பணத்தை விதிப்பதற்குரிய தத்துவம் பின் வரும் நிபந்தனைகளுக்கமைய இவ்வட்டவணையின் II ஆம் நிரலின் ஒத்திசைவான பதிவில் குறிப்பிட்டிருக்கும் அந்தத் திணைக்கள உத்தியோகத்தருக்கு அல்லது உத்தியோகத்தர்களுக்கு இத்தால் கையளிக்கப்படுகிறது :—

(அ) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படக்கூடிய அத்தகைய அறிவுறுத்துரைகளுக்கமைய அந்தத் தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) உத்தியோகத்தர் ஒருவரால் இக்கட்டளையின் கீழ் அத்தகைய உத்தியோகத்தருக்குக் கையளிக்கப்பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தின் கீழ் செய்யப்பட்ட தீர்மானம் ஒன்றுடன் திருப்தியடையாத ஆள் எவரேனும் அதிலிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு முறையீடு செய்யலாம்,

(இ) உத்தியோகத்தர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டுள்ள தண்டனைத் தத்துவம் எதனையும் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பிரயோகிக்க வேண்டுமென்று எவ்விடயத்திலேனும் அரசாங்க சேவை ஆணைக்குழு தீர்மானிக்குமிடத்து அத்தகைய உத்தியோகத்தர் அந்தத் தத்துவத்தை அவ்விடயத்தில் பிரயோகித்தலாகாது.

2. இக்கட்டளையில் உள்ள எதுவும், 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசாங்க பேரவைக் கட்டளையின் 61 ம் பிரிவினால் வழங்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு முறையீடு செய்யும் உரிமையை தாழ்த்துவதாக அல்லது வேறேனும் வழியால் பாதிப்பதாகக் கருதப்படுதல் அல்லது பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II |
|---|---|
| பொது எழுது வினைஞர் சேவையின் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பின் பொது எழுது வினைஞர் வகுப்பினதும் உறுப்பினர்கள்<br>சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர்கள்<br>தட்டச்சாளர்கள் ..<br>தொலைபன்னி இயக்குநர்<br>அலுவலகச் சேவர்கள்<br>தொழிலாளர் .. | கப்பற் சேவைத் தலைவர் |
| அளவை உதவியாளர் | பொறியலாளரும் கப்பல் அளவையாளரும், கப்பற் சேவை தலைவர் உதவிப் பொறியியலாளரும் கப்பல் அளவையாளரும். |

5–345

---

எல். டி. பி. 24/51

## மோட்டார் போக்குவரத்துச் சட்டம்

(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 190 ஆம், 237 ஆம் பிரிவுகளின் கீழ், போக்குவரத்து அமைச்சர் அவர்களால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி. செனெற் சபையாலும் பிரதிநிதிகள் சபையாலும் ஒத்துக்கொள்ளப்பட்டது.

ஈ. எல். பி. ஹுருல்லே,
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மே மீ 2 ந் உ.

**ஒழுங்குவிதிகள்**

1952 ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 27 ஆம் தேதி 10,360 இலக்க அதிவிசேஷ கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு அதன் பின் திருத்தப்பட்டபடியான 1951 ஆம் வருடத்திய மோட்டார் போக்குவரத்து (வாடகைக் கார்களும் ஒம்னி பஸ்களும்) ஒழுங்குவிதிகள் இத்தால் மேலும் கீழ்க் கண்டவாறு திருத்தப்பட்டுள்ளது :—

(1) அதன் பகுதி 11 இல் 27 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதியை உட்புகுத்தியும் :—

"27அ (1) வாடகைக்கு விடப்பட்டுள்ள அல்லது வாடகையின் பொருட்டு பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு போகும் ஒவ்வொரு மோட்டார் காரின் சொந்தக்காரரும் பின்வரும் தகவல் அடங்கிய குறிப்புப் புத்தகம் ஒன்றை வைத்திருந்து பராமரித்தல் வேண்டும் :—

(அ) வாடகைக் காரின் பதிவு இலக்கமும், அதன் உற்பத்திப் பெயரும், தளத்தின் இலக்கமும், இயந்திரத்தின் இலக்கமும் ;

(ஆ) சாரதியின் பெயரும் அவருடைய வாகனம் செலுத்தும் உத்தரவுச் சீட்டின் இலக்கமும் ;

(இ) நாளில் வேலை செய்ய ஆரம்பிக்கும் நேரமும் வேலை முடிவுறும் நேரமும் ;

(ஈ) பழுது ஏற்பட்டிருப்பின் பழுது சீர் செய்வதற்காக விடப்பட்டிருந்த காலம்.

(2) வாடகைக்கு விடப்பட்டுள்ள போது அல்லது வாடகையின் பொருட்டு பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு செல்லும் போது வாடகைக் கார் ஒன்றின் சாரதி பின்வரும் பத்திரங்களை வாடகைக் காரில் கொண்டு செல்லவேண்டும்.

(அ) மோட்டார் வாகனப் பரிசோதகரால் வழங்கப்பட்ட வாடகைக் காருக்குரிய செல்லுபடியாயுள்ள தகுதிச் சான்றுப்பத்திரமும்;

(ஆ) வாடகைக் காரில் பொருத்தப்பட்டுள்ள அளவு கருவி சரியாய் இயக்கத்திலுள்ளதென, ஆணையாளரால் வழங்கப்பட்ட, செல்லுபடியாயுள்ள ஒரு தகுதிச் சான்றிதழ்.

2. பகுதி iv இல் 35 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்கு விதியை உட்புகுத்தியும் :—

"35அ. வழமையாகச் சேவைக்கு உபயோகப்படுத்தப்படும் ஒம்னி பஸ் ஒன்றில் பிரயாணம் செய்யும் பிரயாணி எவரும் கீழே குறிப்பிட்டுள்ளவற்றைறைத் தவிர ஒரு நகர்ப்பகுதியில் அவ் ஒம்னி பஸ்சிலிருந்து இறங்கக்கூடாது :—

(அ) ஒம்னிபஸ்சுகள் நிற்பாட்டுமிடம் அல்லது தங்குவதற்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டு தகுந்த விளம்பரம் மூலம் காட்டப்பட்ட இடம் ; அல்லது

(ஆ) ஒம்னி பஸ்சுகள் தங்குவதற்கான பொது தங்கு நிலையம் அல்லது நிற்பாட்டுவதற்கென ஒதுக்கப்பட்டு தகுந்த விளம்பரம் மூலம் காட்டப்பட்ட இடம் ; அல்லது

(இ) ஒம்னிபஸ்சுகள் நிறுத்துவதற்கென ஒதுக்கப்பட்டு சட்டத்தின் 166 ஆம் பிரிவின் கீழ் விளம்பரம் மூலம் காட்டப்பட்ட இடம் ; அல்லது

(ஈ) பழுதடைந்த போது அல்லது அகஸ்மாத்தான சம்பவத்தின் போது ; அல்லது

(உ) ஓர் இடத்தில் ஒம்னிபஸ் ஒன்றை நிற்பாட்டுவதற்கு ஆணையாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாயுள்ள அனுமதி வைத்திருக்கும் ஒரு ஒம்னிபஸ்சின் சாரதி குறிப்பிட்ட அவ்விடத்தில் அவ் ஒம்னிபஸ்சை நிற்பாட்டும் போது அவ்விடம்."

5–206

---

எல். டி. பி. 61/52.

## மோட்டார் போக்குவரத்துச் சட்டம்

மாத்தறை நகரசபை நிர்வாக எல்லைக்குள் அடங்கிய பகுதிக்கென (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 166 (2) ஆம், 237 ஆம் பிரிவுகளின் கீழ் கௌரவ போக்குவரத்து அமைச்சர் அவர்களால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி. செனெற் சபையாலும் பிரதிநிதிகள் சபையாலும் ஒத்துக்கொள்ளப்பட்டது.

ஈ. எல். பி. ஹுருல்லே,
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு, 2.5.1970.

**ஒழுங்குவிதி**

மாத்தறை நகரசபை நிர்வாக எல்லைக்குள், கீழே தரப்பட்டுள்ள அட்டவணையிற் காட்டியுள்ள வாகனங்கள் நிறுத்தும் பொது நிலையங்கள் ஏதேனுமொன்றிலல்லாது, பெருந்தெருக்கள் ஒன்றிலும் வாடகைக்கார் அல்லது டாச்சி–காப் வாகனங்கள் நிற்பாட்டக்கூடாது.

**அட்டவணை**

1. மாத்தறைப் பாலமும், பஸ் வண்டி நிற்பாட்டுமிடத்திற்கு அண்மையிலும் (நிலையம் இல: 1) இதற்கெல்லைகள் வருமாறு:—
வடக்கே : நில்வலைகங்கை ;
தெற்கே : கோட்டைக்கான வீதியெல்லை ;
கிழக்கே : மாத்தறை–அம்பாந்தோட்டை வீதி ;
மேற்கே : சிறுவர் பூந்தோட்டம்.

2. கொட்டுவீகொட பொதுச் சந்தை (நிலையம் இல. 2) இதற்கெல்லைகள் வருமாறு :—
வடக்கே : பள்ளிமுல்லே வீதி ;
தெற்கே : சந்தை வளவு ;
கிழக்கே : சந்தை வீதி ;
மேற்கே : சந்தையைப் போய் சந்திக்கும் வீதி.

5–207

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## யாழ்ப்பாண மாவட்டத்தில் நடக்கும் திருவிழாக்களை ஒட்டிய யாத்திரைகளைப்பற்றிய 1951 ம் ஆண்டு திகதியிடப்பட்டிருக்கும் விதியின் 3 ம் பிரிவுக்கு அமையப் பிரசுரம்

1970 ம் ஆண்டு சனவரி மாதம் 29 ம் திகதியின் 14,891 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள மேற்படி பிரசுரம் சார்பாக இத்தால் அறியத்தருவது வரணியிலுள்ள சித்திவிரம் அம்மன் கோவில் திருவிழாக்களின் ஆரம்ப திகதியும் முடிவு திகதியும் முறையே 18.5.70, 1.6.70 ம் ஆகும்.

எவ். சீ. பீற்றேர்ஸ்,
யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1970 ம் ஆண்டு மே மீ 3 ந் உ.

5–224

## பிரகடனம்

யாழ்ப்பாண பரிபாலன மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி காரியாதிகாரி பிரிவிலுள்ள புலோப்பளை கிராமசபைக்குப்பட்ட முழுப்பகுதியையும் இவ்வறிவித்தல் திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்கு விசர்நாய்ச்சட்டம் **476** ம் அத்தியாயத்தின் **11** ம் பிரிவின் கீழ் இத்தால் பிரகனடப்படுத்தப் பட்டுள்ளதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

**2.** மேற் கூறபட்டுள்ள பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதியில் தனி யாருக்குச் சொந்தமான கட்டடம், காணி, அல்லது தோட்டம் தவிர்ந்த எதாவது ஒரு பொது இடத்திலோ அல்லது வீதியிலோ அல்லது வேறு இடத்திலோ எந்த நாயாவது கட்டப்படாமலோ காணப்பட்டால் அது உடனடியாக அழிக்கப்பட எதுவாகும்.

எவ். சீ. பீற்றேர்ஸ்,
யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்.

யாழ்ப்பாணக் கச்சேரி,
**1970** ம் ஆண்டு எப்பிரல் மீ **25** ந் உ.

**5–170**

---

## வற்றுப்பளை கண்ணகி அம்மன்கோவில் பொங்கல் உற்சவம்—1970

கண்ணகி அம்மன் பொங்கல் உற்சவம் **1970** ம் ஆண்டு வைகாசி மாதம் **18** ம் திகதி காலை **6.00** மணி தொடக்கம் ஆரம்பமாகும்.

**2.** **1949** ம் ஆண்டு வைகாசி மாதம் **27** ந் திகதியும் **1950** ம் ஆண்டு வைகாசி மாதம் **26** ந் திகதியும் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் (இலக்கம் **9,978, 27.5.49**) (**10,105, 26.5.50**) குறிக்கப்பட்டுள்ள கட்டளைகள் பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன. மேற்கூறப்பட்ட கட்டளைகள் இவ் உற்சவத்தில் தீவிரமாக அமுல்நடத்தப் படும்.

ஆ. பெருமயினர்,
மேலதிக அரசாங்க அதிபர், வவுனியா.

கச்சேரி, வவுனியா,
**1970** ம் ஆண்டு சித்திரை **23** ந் உ.

**5–163**

---

## கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்தல்

### நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்தல்

கூட்டுறவுச் சங்கங்களின் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் **124**)

கூட்டுறவுச் சங்கங்களின் கட்டளைச் சட்டத்தின் **52 (2)** வது பிரிவின் பிரகாரம் கீழே தரப்படும் சங்கங்களை நேரே குறிக்கப்படும் திகதிகளில் கலைப்பதற்கான அறிவித்தல் இத்தால் தரப்படுகிறது :—

| | சங்கத்தின் பெயர் | கலைத்த தேதி |
|---|---|---|
| (1) | மட்டுப்படுத்தப்படாத லெல்லோபிட்டியா கூட்டுறவு கடனுதவு சங்கம் .. .. | 9.3.70 |
| (2) | மட்டுப்படுத்தப்பட்ட கெந்தளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் .. .. .. | 13.3.70 |
| (3) | மட்டுப்படுத்தப்பட்ட தொடந்தெனிய கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கம் .. .. .. | 13.3.70 |
| (4) | மட்டுப்படுத்தப்பட்ட திப்பொட்டுவாவ ஒவில்லா கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கம் .. .. | 13.3.70 |
| (5) | மட்டுப்படுத்தப்பட்ட அம்பான இள விவசாயிகள் கூட்டுறவு விவசாயச் சங்கம் .. .. | 17.3.70 |
| (6) | மட்டுப்படுத்தப்பட்ட ஹரிஸ்பத்துவ கிராமத் தலைவர் சிக்கனமும் சேமிப்பும் சங்கம் .. .. | 17.3.70 |
| (7) | மட்டுப்படுத்தப்பட்ட மெனிப்பே கூட்டுறவு பண்டசாலைச் சங்கம் .. .. .. | 18.3.70 |
| (8) | மட்டுப்படுத்தப்பட்ட கல்லிந்த இள விவசாயிகள் கூட்டுறவு விவசாயச் சங்கம் .. .. | 25.3.70 |
| (9) | மட்டுப்படுத்தப்பட்ட மாதம்ப ஹவத்த இள விவசாயிகள் கூட்டுறவு விவசாயச் சங்கம் .. .. | 25.3.70 |
| (10) | மட்டுப்படுத்தப்பட்ட பத்தப்பொல இள விவசாயிகள் கூட்டுறவு விவசாயச் சங்கம் .. .. | 25.3.70 |
| (11) | மட்டுப்படுத்தப்பட்ட பொம்புவல கூட்டுறவு கோழிப் பண்ணைச் சங்கம் .. .. .. | 26.3.70 |
| (12) | மட்டுப்படுத்தப்பட்ட வெறலுகம இள விவசாயிகள் கூட்டுறவு விவசாயச் சங்கம் .. .. | 25.3.70 |
| (13) | மட்டுப்படுத்தப்பட்ட ஹெப்பன கூட்டுறவு பண்டசாலைச் சங்கம் .. .. .. | 25.3.70 |
| (14) | மட்டுப்படுத்தப்பட்ட கவறவெல கூட்டுறவு பண்டசாலைச் சங்கம் .. .. .. | 25.3.70 |
| (15) | மட்டுப்படுத்தப்பட்ட நாகொட கெப்பிட்டியாகொட மத்திய கூட்டுறவுச் சிக்கனமும் சேமிப்பும் சங்கம் .. | 31.3.70 |
| (16) | மட்டுப்படுத்தப்பட்ட அட்டகாலன் கோறளை கிராமத்தலைவர் கூட்டுறவுச் சிக்கனமும் சேமிப்பும் சங்கம் .. | 31.3.70 |
| (17) | மட்டுப்படுத்தப்பட்ட வஞ்சியான்குளம் கூட்டுறவு பனை உற்பத்தியாளர் சங்கம் .. .. | 17.3.70 |
| (18) | மட்டுப்படுத்தப்படாத உடபுலத்கம கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கங்களின் சமாசம் .. .. | 25.3.70 |

ஆர். பி. ராஜகுரு,
பிரதி கூட்டுறவு ஆக்க ஆணையாளரும்
பிரதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்.

கூட்டுறவுத் திணைக்களம்,
த. பெ. இல. **419**,
கொழும்பு **1**,
**1970** ம் ஆண்டு எப்பிரல் மீ **30** ந் உ.

**5–276**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கு

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர் தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்ப **வேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | 3.4.70 | வெள்ளி | 25.3.70 | புதன் | பி. ப. 3.30 |
| | 10.4.70 | வெள்ளி | 3.4.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 17.4.70 | வெள்ளி | 8.4.70 | புதன் | பி. ப. 3.30 |
| | 24.4.70 | வெள்ளி | 17.4.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 30.4.70 | வியாழன் | 23.4.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| **மே** | 8.5.70 | வெள்ளி | 30.4.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 15.5.70 | வெள்ளி | 8.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 22.5.70 | வெள்ளி | 15.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 29.5.70 | வெள்ளி | 22.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| **யூன்** | 5.6.70 | வெள்ளி | 29.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 11.6.70 | வியாழன் | 5.6.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 18.6.70 | வியாழன் | 11.6.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 25.6.70 | வியாழன் | 18.6.70 | வியாழன் | ந. ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
**அரசாங்க அழுத்தகன்.**

அரசாங்க அச்சகப் பகுதி.
கொழும்பு.
1970 ஆம் ஆ மாச்சு மீ 5 ஆந் ௳.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது